முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.12.2024) சென்னை, வால்டாக்ஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை ஆகிய துறைகளின் சார்பில் 1.383 கோடி ரூபாய் பாதிப்பீட்டிலான 79 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பெரியார் நகர் அரசு மருத்துவமனையின் பயன்பாட்டிற்காக மருத்துவ உபகரணங்கள் வழங்கி, 29 முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தார். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமனற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.12.2024) சென்னை, வால்டாக்ஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ், 1,383 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் திறப்பு விழாவில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்ட புகைப்படக் காட்சியை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமனற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டை படுபாதாளத்திற்கு தள்ளிய விடியா முகங்களுக்கு என்றைக்கும் விடியவே விடியாது!

முதல்வர் உரை.. முதல் பக்கத் தொடர்ச்சி

நாங்கள் எடுத்த நடவடிக்கையால் சென்னை மழை நின்ற அடுத்த நாளே மீண்டு இருக்கிறது. மழை நின்ற உடனே நான் கொளத்தூர் தொகுதியைப் பார்வையிட்டப்போது, அங்கிருந்த ஒரு பெரியவர் சொன்னார். "முதல்முறையாக தில்லை நகர், வீனஸ் நகர், செந்தில் நகர் போன்ற இடங்களில் வெள்ளம் வரவில்லை. இந்த நகருக்கு விடிவுகாலம் பிறந்துவிட்டது"-என்று சொன்னார்!

விடியலைத் தருவதுதான் உதயசூரியன். ஆனால், உதயசூரியன் என்றாலே கண்கள் கூசும் ஆட்களுக்கு விடியல் என்றால் தெரியாது. விடியவில்லை... விடியவில்லை... விடியா ஆட்சி என்று சொல்லிக்கொண்டு இருப்பார்கள். தமிழ்நாட்டை படுபாதாளத்திற்கு தள்ளிய அந்த விடியா முகங்களுக்கு என்றைக்கும் விடியவே முடியாது. அது விடியவும் விடியாது. அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை.

விமர்சிப்பவர்களுக்கும் பணிகளைச் செய்வோம்!

அதே கொளத்தூர் தொகுதியைச் சேர்ந்த இன்னொருவர் என்னிடம் சொன்னார். "உங்களின் பணிகளெல்லாம் வரலாற்றில் ஒரு சிறப்பான இடத்தைப் பெறும்"-என்று பாராட்டினார். அப்போது, நம்முடைய அமைச்சர் சேகர்பாபு அவர்கள், "அண்ணே... இவர் யார் தெரியுமா? இவர் கம்ப்ளைண்ட் பார்ட்டி"-என்று சொன்னார். கம்ப்ளைண்ட் பார்ட்டி -என்று பெயரே உண்டு. எப்போது பார்த்தாலும், நான் போகும்போதெல்லாம் புகார் கொடுத்துக்கொண்டே இருப்பார். உடனே நான் சொன்னேன். "புகார் கொடுப்பவர்களுக்கும் நாங்கள் பணிகளை செய்வோம். நம்மைப்பற்றி விமர்சனம் செய்பவர்களுக்கும் பணிகளை செய்வோம். ஓட்டு போட்டவர்களுக்கு மட்டுமல்ல. ஓட்டுபோட மறந்தவர்களுக்கும் நாம் நன்மையை செய்வோம். இது தான் உண்மையான பாராட்டு. இந்த பாராட்டுகள்தான் எதிர்கட்சியை வயிறு எரிய வைத்திருக்கிறது. ஏன் என்றால், எவ்வளவு மழை பெய்தாலும் முதலமைச்சர் தொடங்கி, துணை முதலமைச்சர், அமைச்சர்கள் என்று அனைவரும் களத்தில் வந்து நிற்கிறார்கள். நிவாரண உதவிகளை செய்கிறார்கள். நம்மால் அரசியல் செய்யமுடியவில்லை என்று இப்போது தவிக்கிறார்கள். நம்மைப் பொறுத்தவரையில் நமக்கு மக்களின் மனசுதான் முக்கியம்.

உங்களுக்கு மனசுதான் எங்களுக்கு முக்கியம். பொதுமக்கள் முன்வைக்கும் நியாயமான புகார்களை, விமர்சனங்களை அவர்களின் குறைகளை கவனத்தில் எடுத்துக்கொண்டு, அதை தீர்க்க செயல்படுகிறோம். நம்முடைய அரசில், மக்களின் குரல் கேட்கப்படுகிறது! உங்களின் தேவைகள் தெரிந்துக்கொள்ள முயற்சிக்கிறோம். அதனால்தான், மழை நின்ற அடுத்த சில நாட்களிலேயே, சென்னையின் அடுத்தக்கட்ட வளர்ச்சிக்கான திட்டங்களைத் தொடங்கி வைக்க நாங்களும் நீங்களும் இங்கு வந்திருக்கிறோம். எவ்வளவு பெரிய மழை பெய்தது. முடிந்த அடுத்தநாளே இன்றைக்கு உங்களை சந்திக்க வந்திருக்கிறோம் என்றால், அதைத்தான் நீங்கள் உணர்ந்து பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட இந்த விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் அமைச்சர் சேகர் பாபு அவர்களுக்கும், அவருக்கு துணை நின்ற அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வட சென்னையில் வளர்ச்சித் திட்டங்கள்!

ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, ஒவ்வொரு முறை வடசென்னை பகுதிக்கு வரும்போது, வட சென்னை வளர்ச்சிக்கான திட்டங்களை செய்ய வேண்டும் என்று அமைச்சர் சேகர்பாபு அவர்களிடம் நான் சொல்லிக்கொண்டே இருப்பேன். ஏன் என்றால், தென்சென்னைக்கே சென்றுக் கொண்டிருக்கிறோம். வடசென்னையை நாம் ஒரு அக்கறை எடுத்துக்கொண்டு அதன் வளர்ச்சித் திட்டங்களை உருவாக்க வேண்டும். அதற்கு செயல்வடிவம் கொடுப்பதற்கான அறிவிப்பை, கடந்த மார்ச் 14-ஆம் நாள் தங்கச்சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், "வடசென்னை வளர்ச்சித் திட்டம்"என்று பெயர் சூட்டி, இரண்டாயிரத்து 96 கோடி ரூபாய்க்கான 87 திட்டப்பணிகளை அறிவித்து, தொடங்கினோம். தொடங்கி வைத்த எட்டே மாதத்தில், அந்த 87 பணிகளில் 29 பணிகளை முடித்து, இன்றைக்கு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்திருக்கிறோம்!

இன்று, வால்டாக்ஸ் சாலையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், 1,383 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 79 புதிய பணிகளையும் தொடங்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சிங்காரச் சென்னையாக்க வளர்ச்சித் திட்டங்கள்!

வள்ளலார், நம்முடைய சென்னையை 'தருமமிகு சென்னை'-என்று சொல்வார். "இந்த ஊருக்கு வந்தால் - நிச்சயம் நம்முடைய வாழ்க்கையும் குடும்பமும் முன்னேறிவிடும்"-என்று நம்பி வந்தவர்களை சென்னை எப்போதும் கைவிட்டது இல்லை! அப்படிப்பட்ட இந்த சென்னை மாநகரத்திற்கு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயராக நான் பொறுப்பேற்று, இந்தச் சென்னையை சிங்காரச் சென்னையாக வளர்த்தெடுக்க திட்டங்களை உருவாக்கினேன். இன்றைக்கு முதலமைச்சர் என்ற பொறுப்பில் பல்வேறு திட்டங்களை தொடங்கி வைக்க வந்திருக்கிறேன்.

என்னை தலைமைச் செயலகத்தில் சந்திக்க வரும் வெளிநாட்டு தூதுவர்கள் பல பேர் மறக்காமல் ஒன்றை நிச்சயமாக சொல்வார்கள். "சென்னை சிட்டி இப்படி டெவலப் ஆனதற்கு நீங்கள்தான் காரணம்"-என்று அவர்கள் சொல்வதைக் கேட்கும்போது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும். அந்த மகிழ்ச்சியைவிட மனநிறைவைவிட, இந்த மாநகரத்திற்காக இன்னும் நிறைய செய்ய வேண்டும் என்ற எண்ணம்தான் எனக்குள் அப்போது வரும், வளரும்!

ரூ.6309 கோடியில் 252 திட்டங்கள்!

ஆரம்பக் காலக்கட்டத்தில் சென்னை என்று சொன்னாலே, அது இந்த வடசென்னைதான்! இன்றைக்கு சென்னை மிகப்பெரிய நகரமாக வளர்ந்துவிட்டது! சென்னைக்கு, மேயராக - உள்ளாட்சித் துறை அமைச்சராக நான் செய்ததைவிட, முதலமைச்சராக நிறைய செய்யவேண்டும் என்று என்னுடைய பொறுப்பும் கூடிவிட்டது! அதுவும் வடசென்னை வளர்ச்சிக்கு, ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதன்முதலாக தொடங்கி வைத்தோம்.

ஒவ்வொரு திட்டமாக சேர்ந்து சேர்ந்து, இப்போது, 6,309 கோடி ரூபாய்க்கு, 252 திட்டங்கள் செயல்படுத்தப்படக்கூடிய நிலைக்கு வந்திருக்கிறோம். என்னென்ன திட்டங்கள் இதில் எடுத்து கொள்ளப்படுகிறது என்றால், பாதுகாக்கப்பட்ட குடிநீர், சீராக கழிவுநீர் செல்வதற்கான அமைப்புகள், அனைத்துக் கழிவு நீரேற்ற நிலையங்களை மேம்படுத்துதல், போதிய மருத்துவ வசதி, தொழிற்கல்வி, திறன் மேம்பாடு, பகிர்ந்த பணியிடம், நூலகங்களை தரம் உயர்த்துதல், கல்வி மையம், பள்ளிக்கூட கட்டடங்கள், விளையாட்டு மைதானங்கள், சீரான சாலைகள், பூங்காக்கள், மின்விளக்கு வசதிகள், துணை மின்நிலையங்கள், இதுமட்டுமல்ல, 40 ஆண்டுகளுக்குமேலாக 200 சதுர அடிகுடியிருப்பிலிருந்த அடித்தட்டு மக்களின் தேவையை உணர்ந்து, வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், 400 சதுர அடிக்கு மேலாக மறுகட்டுமானம், புதிய குடியிருப்புகள் ஏற்படுத்துதல் -என்று சென்னை மக்களின் தேவைகள் என்னென்ன என்று பார்த்து பார்த்து திட்டங்களை இன்றைக்கு உருவாக்கியிருக்கிறோம்.

சென்னையை எப்படி கடந்த காலங்களில் வளர்த்தெடுத்தோமோ, அதேபோன்று, இன்றைக்கு தொடங்கி வைக்கப்பட்டிருக்கும் இந்த திட்டங்கள் மூலமாக எதிர்காலத்திற்கு தேவையான கட்டமைப்புகளை உருவாக்கி, சிங்காரச் சென்னையை கட்டியெழுப்புவோம்! வந்தாரை வாழவைக்கும் சென்னை, மெரினாவில் உதிக்கும் உதயசூரியனின் ஒளியிலும்; திராவிட மாடல் ஆட்சியின் ஒளியிலும் - ஒளிரும்! ஒளிரும்! ஒளிரும்! ஒளிர்ந்துக்கொண்டே இருக்கும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

விழுப்புரம் மாவட்டத்தில் தொற்று நோய் ஏற்படாமல் இருக்க

நடமாடும் பொது சுகாதாரம் - நோய் தடுப்பு வாகனங்கள்!

அமைச்சர் க.பொன்முடி தொடங்கி வைத்தார்!

விழுப்புரம், டிச. 6-

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க விழுப்புரத்தில் நடமாடும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு வாகனங்களை வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தொடக்கி வைத்தார்.

விழுப்புரத்தில் கடந்த சில நாட்களாக அதிக கன மழை பொழிந்தது இதனால் குடியிருப்பு பகுதிகளில் மழை வெள்ளம் தேங்கியது. இதனால் பொது மக்களுக்கு தொற்று நோய் ஏற்படாமல் இருக்க விழுப்புரம் மாவட்ட சுகாதாரத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதன் ஒரு கட்டமாக விழுப்புரம் மாவட்டம் முழுவதும் பொது சுகாதாரத்துறை மூலமாக நடமாடும் மருத்துவ வாகனங்களை இயக்கி வைக்கப்பட்டது. இந்த நடமாடும் மருத்துவ வாகனங்களை வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தொடக்கி வைத்தார். மொத்தம் எட்டு வாகனங்கள் மாவட்டம் முழுவதும் அனைத்து ஊராட்சிகளுக்கும் இந்த வாகனம் செல்கிறது.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் முனைவர் க.பொன்முடி பேசியதாவது:-

மாவட்ட மக்களுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படாமல் இருப்பதற்காக இந்த வாகனங்கள் இயக்க வைக்கப்பட்டுள்ளது. ஒரு வாரத்திற்கு இந்த வாகனங்கள் அனைத்து ஊராட்சிகளுக்கு செல்லும், பொதுமக்கள் இதனை பயன் படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் திருச்சி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் இருந்து நான்கு மருத்துவ குழுக்கள் வரவழைக்கப்பட்டு மொத்தம் 60 நடமாடும் மருத்துவ குழுக்கள் 146 இடங்களில் மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார் .

போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவ சங்கர், மாவட்ட ஆட்சியர் சி.பழனி, மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், டாக்டர்.இலட்சுமணன், அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் ம.ஜெயச் சந்திரன்,

மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா இளந்திரையன், தலைமை கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், அரசு வழக்கறிஞர் எம்.சி.கே.அருண் ராஜா, நகர மன்ற துணைத் தலைவர் சித்திக் அலி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

பெஞ்சல் புயலால் ஏற்பட்ட கனமழையால் பாதிக்கப்பட்ட திருக்கோவிலூர் தொகுதி, அரங்கண்டநல்லூர் பேரூர் மக்களுக்கு வீடு, வீடாக விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி நிவாரணப் பொருட்களை வழங்கி ஆறுதல் கூறினார். மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தலைமை கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், ஒன்றியச் செயலாளர் அ.சா.ஏ.பிரபு, பேரூராட்சி மன்றத் தலைவர் ராயல் எஸ் அன்பு, பேரூர் செயலாளர் சுந்தரமூர்த்தி, நகரச் செயலாளர் கோபிகிருஷ்ணன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு எம்.எஸ்.அக்பர், அரசு வழக்கறிஞர் எம்.சி.கே.அருண்ராஜா, அறங்காவலர் குழு உறுப்பினர் மாலதி, துணைத் தலைவர் குணா, ஒன்றிய நிர்வாகிகள். சக்திசிவம், வெங்கட், ஜெய்சங்கர், பிரகாஷ், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

விளையாட்டு மேம்பாட்டு அணி ஒன்றிய அமைப்பாளர் ஹரிஹரசுதன்தேவா ஏற்பாட்டில்

திருவாரூரில் துணை முதலமைச்சர் பிறந்தநாள் விழா பிரமாண்ட இறகு பந்துபோட்டிகள்!

பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திருவாரூர், டிச.6 –

திருவாரூர் ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா, சிறப்பு இறகுப்பந்து போட்டிகளை பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

திருவாரூர் ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில்,கலைஞர் நூற்றாண்டு விழா நிறைவு விழா, இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா ஆகியவற்றை முன்னிட்டு திருவாரூரில் பிரம்மாண்ட இறகுப்பந்து போட்டிகள் நடைபெற்றது.

திருவாரூர் ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணியின் அமைப்பாளர் ஹரிஹரசுதன்தேவா ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த போட்டிகளை மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். ஒன்றிய கழக செயலாளர் புலிவலம் ஏ.தேவா, நகர கழக செயலாளர் வாரை. எஸ்.பிரகாஷ், பேரூர் கழக செயலாளர் பூண்டி கே. கலைவேந்தன்,பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் அமைப்பாளர்கள் எம்.என். ராஜா, வி.என்.ஆர்.பன்னீர்செல்வம், பி.ஜி.ஆர்.ராஜாராமன், பெ.இளவரசன், ஜி. கோபிநாத், தீ.விமல்ராஜ் போ.பத்மபிரசாத், ஜாகிர் உசேன், எழில் ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஹரிஹரசுதன் தேவா, துணை அமைப்பாளர்கள் சரவணன், சந்திரசேகர், சிராஜ், மாதவன் பாலாஜி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு முழுவதிலும் இருந்தும் வந்திருந்த பூப்பந்தாட்ட அணிகள் மோதிய இந்த போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசு கோப்பைகளை ஒன்றிய குழு தலைவரும் ஒன்றிய செயலாளருமான புலிவலம் ஏ.தேவா வழங்கினார்.

போட்டியில் முதலாவதாக வந்த அணிக்கு ரூபாய் 15,000 ரொக்க பரிசும், இரண்டாவதாக அந்த அணிக்கு ரூபாய் 12000, ரொக்க பரிசும் மூன்றாவ தாக வந்த அணிக்கு ரூபாய் 8000 ரொக்கப்பரிசும், நான்காவது இடம்பெற்ற அணிக்கு ரூபாய் 6000 ரொக்க பரிசும் வழங்கப்பட்டன. முதல் நான்கு இடங்களை பிடித்த இந்த அணிகளுக்கு விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் வெற்றி கோப்பைகளும் வழங்கப்பட்டன.

திருவாரூர் நாகை பிரதான சாலையில் உள்விளையாட்டு அரங்கில்ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணியின் அமைப்பாளர் ஹரிஹரசுதன் தேவா ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த போட்டிகளுக்கான ஏற்பாடுகளை ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணியினர் மாவட்ட விளை யாட்டு மேம்பாட்டு அணையினருடன் இணைந்து சிறப்பாக செய்திருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வீரா (எ) வி.வீரமணி

டிசம்பர் 6 (2020)

கழகக் குடும்பத்தைச் சேர்ந்த இவர், தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

வடசென்னை மாவட்டத்தில், பகுதிப் பிரதிநிதியாகவும், வட்டக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.